# தருமபுரி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,

பிறப்பிப்பவர் : திருமதி. ஐ.ஜோதிசந்திரா, எம்.எஸ்.ஸி.,எம்.எட்.,எம்.பில்.,

திருவள்ளுவராண்டு 2056 / குரோதி வருடம் / பங்குனி - 14

மூ.மு.எண்.7134/அ1/2024 நாள் 28.03.2025

பொருள் நிருவாகம் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – பணிவரன்முறை – திரு. மு.கவிமுத்து, இளநிலை உதவியாளர், அரசு உயர்நிலைப்பள்ளி, செங்குட்டை, தருமபுரி மாவட்டம் – இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – சார்ந்து.

பார்வை..

1) சென்னை 3, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக்குழு செயலாளரின் கடிதம்.எண்.1975/PSD.C2/2023 நாள் 25.08.2023.
2) தருமபுரி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல் முறைகள், ந.க.எண்.05916/அ1/2023 நாள் 27.09.2023.
3) உதவி இயக்குநர், அரசுத்தேர்வுகள் இயக்ககம், தருமபுரி , கடிதம் ந.க.எண்.043936/அ1/2023 நாள் 19.10.2023.
4) தலைமை ஆசிரியர், அரசு உயர்நிலைப்பள்ளி, செங்குட்டை, தருமபுரி மாவட்டம் கடிதம் ந.க.எண்.56/2024 நாள் 04.11.2024.
5) சம்பந்தப்பட்ட பள்ளியாளரது விண்ணப்பம் நாள் ..

= = =

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக்குழு தொகுதி- IV – இன் மூலம் தேர்வு செய்யப்பட்டு, தருமபுரி மாவட்டம், செங்குட்டை, அரசு உயர்நிலைப்பள்ளியில் பணிபுரிந்து வரும் திரு. மு.கவிமுத்து என்பாருக்கு பார்வை (2) ல் காணும் செயல்முறைகளின்படி இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டதையடுத்து தனியர் 29.09.2023 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகின்றார்.

பார்வை (3) இல் கண்டுள்ள தருமபுரி, அரசுத்தேர்வுகள் உதவி இயக்குநரால் தனியரின் பள்ளி இடைநிலை மற்றும் மேல்நிலை கல்விச்சான்றிதழ்கள் உண்மைத்தன்மை வாய்ந்தவை என அறிக்கை பெறப்பட்டுள்ளது. கல்விச்சான்றுகள் உண்மைத்தன்மை வாய்ந்தவை என பெறப்பட்ட அறிக்கையின் அடிப்படையிலும், இப்பணியாளருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் முதல் கீழ்க்கண்டவாறு பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| தேர்வாணையப் பட்டியலின் வரிசை எண் | பெயர் / பதவி மற்றும் பணிபுரியும் பள்ளி | நியமன முறை | இளநிலை உதவியாளர் பதவியில் நியமன நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 5 | 6 |
| 90 | திரு. மு. கவிமுத்து<br>இளநிலை உதவியாளர்,<br>அரசு உயர்நிலைப்பள்ளி,<br>செங்குட்டை,<br>தருமபுரி மாவட்டம். | தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் | 29.09.2023 முற்பகல் | 29.09.2023 முற்பகல் |

1. இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர் மூன்றாண்டு பணிக்காலத்திற்குள் இரண்டாண்டுகள் பூர்த்தி செய்த பின்னரே இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் முடிக்கப்பட வேண்டும்.

2. உயர்நிலைப் பள்ளிப் படிப்பில் தமிழை மொழிப்பாடமாகவோ அல்லது கற்பிப்பு மொழியாகவோ பயிலாமல் இருப்பின் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக் குழுமத்தால் நடத்தப்படும் தமிழ் இரண்டாம் நிலைத்தேர்வில் பணிவரன்முறை செய்த நாளிலிருந்து இரண்டாண்டிற்குள் தேர்ச்சி பெற வேண்டும்.
3. இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் முடிக்கப்பட்ட பின்னரே இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் வழங்க இயலும்.
4. தகுதிகாண் பருவ காலத்தில் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வினையும், அரசு அலுவலருக்கான அடிப்படைப்பயிற்சி (பவானிசாகர்) முடித்தல் வேண்டும். தகுதிகாண் பருவம் முடித்தமைக்கான ஆணை பெறப்பட்ட பின்னரே இரண்டாவது ஆண்டு ஊதிய உயர்வு அனுமதிக்க வேண்டும். பணிப்பதிவேடு பெற்றுக்கொண்டமைக்கு ஒப்புதல் அனுப்பி வைக்குமாறு சார்ந்த தலைமை ஆசிரியருக்கு தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்,
தருமபுரி.

பெறுதல் –
திரு. மு. கவிமுத்து
இளநிலை உதவியாளர்,
அரசு உயர்நிலைப்பள்ளி,
செங்குட்டை, தருமபுரி மாவட்டம்.
(உரிய வழியில்)

நகல் – தலைமை ஆசிரியர், அரசு உயர்நிலைப்பள்ளி, செங்குட்டை, தருமபுரி மாவட்டம்.